R5284

## WHY THERE IS DIVERSITY AMONGST GOD'S PEOPLE

# தேவனுடைய ஜனங்களிடையே ஏன் வேற்றுமை இருக்கிறது

"உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது?"– 1கொரிந்தியர் 4:7

அனைத்து மனிதர்களும் மாற்ற முடியாத உரிமைகள் மற்றும் சலுகைகளுடன் பிறந்திருப்பது உண்மையாயிருந்தாலும், பாவமில்லாமல் யாரும் பிறப்பதில்லை. ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னதாக மனித இனம் ஆதாமில் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டதை வேத வாக்கியங்கள் மிகவும் சரியாக அறிவிக்கிறது. இந்த அர்த்தத்தில் நாம் சுதந்தரமாக பிறக்காமல் பாவத்தின் அடிமைகளாக பிறந்தோம். சமமாகவும் நாம் பிறக்கவில்லை. இரண்டு நபர்கள் சந்தர்ப்பம், திறமை, சமார்த்தியம் ஆகியவைகளில் சமமாக இருப்பதில்லை. நாம் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறோம். தேவன் சிலரை மேன்மையாகவும், சிலரை மோசமாகவும், சிலரை அதிக செல்வந்தராகவும் சிலரை குறைந்த செல்வந்தராகவும் உண்டாக்கவில்லை. மனுக்குலத்தின் ஆரம்பத்தை வேதாகம அறிக்கையிலிருந்து எடுத்துக்கொண்டு, தேவன் ஆதாமை பூரணராக உண்டாக்கினார் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனித இனத்திற்கு தடையை உண்டாக்கின அனைத்து அபூரணங்களும் மரிக்கும் செயல்பாடுகளின் பலன்களாகும். நாம் ஆதியிலே உண்டாக்கப்பட்ட தேவரூபம் மற்றும் தேவ சாயலிலிருந்து பாவமானது நம் அனைவரையும் வேறுபடுத்திவிட்டது. சாத்தான் இந்த வேறுபாடுகளை தாய் ஏவாள் மூலம் கொண்டு வந்தான்.

நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி என்கிற ஒரு புது அமைப்பை மனதில் கொண்டிருக்கிறார். அவர்களிடையேயும் வேறுபாடுகள் உள்ளன. சபையில் சிலருக்கு அநேக திறமைகள் உள்ளன. மற்றவர்கள் குறைவான திறமையை பெற்றிக்கிறார்கள். சிலர் விசேஷித்த திறமைகளை பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் குறைவான திறமைகளை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான அல்லது குறைவான திறமைகளை கொடுக்கப்படுவதற்காக சாத்தான் குற்றம் சாட்டப்படவில்லை. தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். வெவ்வேறு அவயங்களை சரீரத்தில் வைப்பதும் வெவ்வேறு வகையான கனிகளை கொண்டு வருவதும் நமது இருதயங்களில் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. இப்படியாக நாம் ஒருவருக்கொருவர் வேறுபடுத்தப்பட்டுள்ளோம்.

### வேற்றுமை அடைவதற்கான காரணம்

பரிசுத்த ஆவியில் வளருகிற காரியம் தேவனுடைய சித்தத்தை அறிவதிலும் செய்வதிலும் ஒவ்வொருவருக்கும் இருக்கக்கூடிய வைராக்கியத்தை பெரும்பாலும் சார்ந்திருக்கிறது. கிறிஸ்துவின் பள்ளியில் நாம் அவரை அறிந்து கொள்ளுவதற்காக வைக்கப்பட்டுள்ளோம். சிலர் அதிக வேகமாக கற்றுக்கொள்ளுகிறார்கள், மற்றவர்கள் குறைவான வேகத்தில் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் கற்றுக்கொள்ளுகிறதற்கு தக்கதாக அவர்கள் அதிகமான சந்தர்ப்பங்களையும் ஆசீர்வாதங்களையும் பெறுகிறார்கள். அனைவரும் ஓர் அளவுக்கான பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; அனைவரும் சில ஆசீர்வாதங்களை கொடுக்கப் பெற்றிருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தை அறிய மிகவும் ஆவல் உள்ளவர்களாயிருந்து ஆராயும் போது அவர்கள் மிகவும் வேகமாக வளருகிறார்கள். இப்படியாக பரிசுத்த ஆவியை அதிகமாக பெறுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய சித்தத்தில் மிகவும் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது முன்னேற்றத்திற்கு அவர்களே முழுவதுமாக காரணமாக இருப்பதில்லை. ஆனால் தேவனுடைய கிருபையும் காரணமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: நீங்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறீர்கள். "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." இந்த வேலையை நாமே செய்ய முடியாது. நம்மில் கிரியை செய்கிற சக்தி தேவனுடையது. அவர் ஒரு மகிமையான ஆலயத்தை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். யார் இந்த ஆலயத்துக்கு பிரதான மூலைக்கல்லாக இருப்பார் என்பதையும் யார் ஆலய வகுப்பாராக இருப்பார் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். நாமே அந்த இடத்தை தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால் தேவனுடைய கிருபையினால் நாம் ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருப்பதற்கான அழைப்பிற்கு நாம் செவி கொடுத்துள்ளோம். கற்களானது முதலாவது இருளான கல் சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்டன. தற்போது அவைகள் மகிமையான கட்டடத்தில் இடங்களுக்காக உருவேற்படுத்தி தயார்படுத்தப்படுகின்றன.

## இன்னொரு வகையான வேற்றுமை

மகா பெரிய தொழிலாளி நம்மில் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறார். அவர் நம்மை செதுக்கி உருவாக்குகிறார். நாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி நம்மை செய்கிறார். அங்கு பெருமை பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஓர் அளவான குணநலம் ஒவ்வொருவருடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனினும் அங்கு அதிகப்படியான குறுக்கு ஓட்டம் காணப்பட்டால் அது ஒதுக்கப்படும். அப்போஸ்தலர் பேதுரு கூறுவது போல் ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும். நாம் பெற்றிருக்கிற அனைத்திற்காகவும் நாம் தேவனை நோக்கவும் மகிமைப்படுத்தவும் வேண்டும் என்று அதே அப்போஸ்தலர் நமக்கு ஞாபகப்படுத்துகிறார். (1பேதுரு 5:6; 4:1)

நாம் தேவனுடன் உடன் வேலையாட்கள். நாம் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது தேவன் நம்மை வேறுபடுத்துவதால், நாம் அவரை போற்ற வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய நாடுவதால் நாட்கள் செல்லச் செல்ல தொடர்ந்து நம்மில் அவர் கிரியை நடப்பித்து ஒவ்வொரு நாளும் நாம் இப்படியாக வேறுபடும்படி செய்கிறார். நாமாக எதையும் பெற்றிருக்கிறோமா? ஒன்றுமேயில்லை! நமது தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் முழுவதுமாக மரித்த நிலையிலிருந்தோம். நித்திய ஜீவனுக்கு உரிமையற்றவர்களாய் இந்த நிலைமையில் நாம் பிறந்தோம். ஆனால் தேவன் உலகளாவிய ஆசீர்வாதத்திற்கு ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். இந்த திட்டத்தில் நமக்கு அதிக லாபம் தரக்கூடிய உயர்ந்த அம்சங்களை வைத்திருக்கிறார். அவர் நம்மை உலகத்தார் வருவதற்கு முன்னே வரும்படி அழைத்திருக்கிறார். இதை நாம் அவரது கிருபையினால் பெறுகிறோம்.